# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.73/2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 9 | நாள் | : | 18.09.2025 |
| பெயர் | : | குருசாமி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 18th day of September 2025.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது செவல்குளம் ஊரில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரில் உள்ள நபர்கள் வெளிநாட்டிற்கு வேலைக்கு ஆட்களை அனுப்புவதாகவும், கரிவலம்வந்தநல்லூரில் உள்ள பயாட் நிறுவனம் அனுப்பி வைப்பதாகவும் கூறினார்கள். நான் அந்த நிறுவனத்தை அனுகியபோது அவர்கள் ரூ.1,50,000/- முன்பணமாக செலுத்த வேண்டுமென்று சொன்னார்கள் நான் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன். நான் கடன் வாங்கி ரூ.81,600/- செலுத்தினேன். நான் பலமுறை கேட்டபோதும் விசா இன்னும் வரவில்லை என்று சொன்னார்கள். நான் வடகரையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது எனக்கு தொலைபேசிமூலம் தகவல் வந்தது. நான் கரிவலம்வந்தநல்லூரில் உள்ள பயாட் நிறுவனம் சென்று

பார்த்தபோது அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. என்னை காவல் துறையினர் விசாரித்தார்கள். 2012ம் ஆண்டு அவ்வாறு பணம் கேட்டார்கள் நான் பணம் செலுத்தினேன். சுமார் 6 மாதம் கழித்து நான் ஏமாந்துபோனதை கண்டுபிடித்தேன். இன்று இரசீது கொண்டு வந்துள்ளேன்.

**எதிரிகள் தரப்பில் கு.வி.**

என்னை சங்கரன்கோவில் எஸ்.பி. ஆபிசில் விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்களை அவரிடம் சொன்னேன். நான் பணம் கொடுத்து ஏமாந்த விவரத்தை புகாராக எழுதிக் கொடுக்கவில்லை. முன்னதாக வேறு சிலர் புகார் கொடுத்திருப்பதாக சொன்னதால் புகார் கொடுக்கவில்லை. அந்த பயாட் நிறுவனம் அருகே கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம் உள்ளது. நான் எந்த காவல் அலுவலரையும் அனுகி தகவல் சொல்லவில்லை.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.18 18:30:28 +0530